**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்.</u>**

முன்னிலை – **சி.ப.முல்லை வாணன், B.A.B.L.(Hons).,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிபதி

***2026 ஆம் ஆண்டு மே மாதம் 14 ம் நாள் வியாழக்கிழமை***

*திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 31 ஆம் தேதி*

**<u>ஆண்டுப்பட்டிக்கை வழக்கு எண்.1007/2023</u>**

**<u>(CNR.NO.TNCG10-007023-2023)</u>**

<u>குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106 ன் மற்றும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் சுற்றறிக்கை ஆர்.ஓ.சி.எண்.814/2021/ஆர்ஜி/ஜி1 தேதி 07.04.2021 படி கீழ்கண்ட அட்டவணை இணைக்கப்படுகிறது.</u>

| **எண்** | **வழக்கின் விபரம்** | | |
|---|---|---|---|
| 01 | காவல் நிலையத்தின் பெயர் | – | குரோம்பேட்டை போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையம் |
| 02 | காவல் நிலைய குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் | – | குற்ற எண்.51/2019, இதச பிரிவுகள் 279, 304(A) |
| 03 | குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர் மற்றும் இருப்பிடம் பற்றிய விபரங்கள் | – | ஆறுமுகம்,வ.50 த/பெ சுப்பிரமணி எண்.289/13, சித்தூர் ரோடு, அமிர்தாபுரம், திருத்தணி, திருவள்ளுவர் மாவட்டம். |
| 04 | குற்ற நிகழ்வு நாள் | – | 28.01.2019 |
| 05 | முறையீடு மற்றும் வழக்கு கோப்பில் எடுத்த நாள் | – | 13.01.2020 |
| 06 | குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நாள் | – | 28.01.2019 |
| 07 | குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | – | 28.01.2019 |
| 08 | குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையின் பேரில் விடுவிக்கப்பட்ட நாள் | – | 28.01.2019 |

| | | | |
|---|---|---|---|
| 09 | இவ்வழக்கு மேல் நடவடிக்கை குறித்து மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பிய நாள் | – | எழவில்லை |
| 10 | ஒப்படைத்தல்/ அனுப்பிவைத்தல் | – | எழவில்லை |
| 11 | குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | – | 19.02.2020 |
| 12 | கு.வி.மு.ச பிரிவு 251 கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 07.03.2020 |
| 13 | கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழான மனுவை தவிர பிற மனுக்களின் விபரம் | | எழவில்லை |
| 14 | அரசுதரப்பு சாட்சிகளிடம் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த நாள் | – | (see table below) |
| 15 | கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர் கேள்வி வினவப்பட்ட நாள் | – | 13.02.2026 |
| 16 | குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் தலைமறைவு எதிரிகள் மற்றும் தலைமறைவு எதிரிகள் ஆஜரான விபரம் | – | இல்லை |

| அ.சா. | மு.வி. | கு.வி. |
|---|---|---|
| அ.சா.1 | 29.05.2025 | 29.05.2025 |
| அ.சா.2 | 29.05.2025 | 29.05.2025 |
| அ.சா.3 | 24.07.2025 | 24.07.2025 |
| அ.சா.4 | 24.07.2025 | 24.07.2025 |
| அ.சா.5 | 17.09.2025 | 17.09.2025 |
| அ.சா.6 | 30.01.2026 | 30.01.2026 |

| | | | |
|---|---|---|---|
| 17 | மேலமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடை ஆணை மற்றும் முடிவுகள் | – | இல்லை |
| 18 | விசாரணை முடிவுற்ற நாள் | – | 23.03.2026 |
| 19 | தண்டனை அல்லது தீர்ப்பு பகரப்பட்ட நாள் | | 14.05.2026 |
| 20 | தீர்ப்பு நகலை வழங்குதல் / குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான முடிவு | | எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் எதிரி விடுதலை செய்யப்பட்டார். |
| 21 | காலதாமதத்திற்கான விளக்கம் | | சாட்சிகள் ஆஜர்படுத்த காலதாமதம் ஆனதால், வழக்கை முடிக்க காலதாமதம் ஏற்பட்டது. |

இவ்வழக்கானது மாண்பமை தாம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1 ல் ஆ.வ.எண்.09/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு மாண்பமை செங்கல்பட்டு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற டி.எண். 8101/2022, நாள் 04.11.2022 தேதி உத்தரவின் படி மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு ஆ.வ.எண்.1007/2023 என கடந்த 13.10.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்குரைஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.பி.ரவிசந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு

வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

**01) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

அரசு தரப்பு வழக்கானது கடந்த 28.01.2019 ம் தேதி காலை 7.50 மணியளவில் பம்மல் நல்லதம்பி சாலையில் கதவு எண்.19 முன்பு நிகழ்நிலை புகார்தாரர் TN-06-E-6118 Honda Activa மோட்டார் சைக்கிளில் அவரது மகள் ஆலியா தாசின் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளை மேற்கிலிருந்து கிழக்காக ஓட்டி சென்றதாகவும், அதே சாலையில் அதே திசையில் சென்ற TN-01-AN-1213 என்ற MTC மினி பேருந்தை வலது புறமாக முந்தி சென்றதாகவும், பின்பு எதிரே வந்த பதிவு எண் தெரியாத மோட்டார் சைக்கிளின் மீது மோதாமலிருக்க பிரேக் போட்டதில் சறுக்கி மோட்டார் சைக்கிளுடன் நிலை தடுமாறி இருவரும் சாலையில் விழுந்துள்ளனர் என்றும், மேலும் மோட்டார் சைக்கிளுக்கு இணையாக TN-01-AN-1213 MTC மினி பேருந்தை எதிரி ஆறுமுகம் என்பவர் அதிவேகமாகவும், அசட்டையாகவும் ஓட்டி வந்ததில் எம்டிசி பேருந்தின் வலது பக்க சக்கரம் கீழே விழுந்த ஆலியா தாசின் தலையில் ஏறி இறங்கியுள்ளது என்றும், இந்த விபத்தில் ஆலியாதாசின் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார் என்றும் எனவே மேற்படி எதிரியின் செய்கை குறித்து புகார்தாரர் அளித்த புகாரின் அடிப்படையில் எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 279, 304(A) படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குரோம்பேட்டை போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்ற எண்.51/2019 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்பு வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

02) எதிரி மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தாம்பரம் கு.ப.ம.எண்.9609/2014–ன் படி பிணை பெற்று பிணையில் இருந்து வருகிறார்.

03) குற்ற இறுதியறிக்கை பரிசீலனைக்குப் பின் எதிரிக்கு எதிராக மேற்படி வழக்கு எண்ணில் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் படி வழங்கப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும். வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவுசெய்து கு.வி.மு.ச பிரிவு 251–ன் படி, எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து, வழக்கு விசாரணையை எதிர் கொள்வதாக கூறி, வழக்கு விசாரணைக்கு வேண்டினார். அதனால், அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

04) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் மனு அ.சா.ஆ.1, பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ 2, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆகவும், மாதிரி வரைப்படம் அ.சா.ஆ 4, பார்வை மகஜர் அ.சா.ஆ 5, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 6, பிண கூராய்வு சான்று அ.சா.ஆ 7, விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 8, விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 9 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்ற சாட்சிகள் விசாரிக்கப்படாமல் அரசுதரப்பில் நீக்கறவு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

05) **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :–</u>**

5.1) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 1 திரு.சையத் அம்ஜத் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் அனங்காபுத்தூர் பகுதியில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் வணிக கப்பலில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன் என்றும், கடந்த 28.1.2019 அன்று தனது இளைய மகள் ஆலியா தாஸின் என்பவர் நந்தனத்தில் உள்ள ஜஸ்டிஸ் பாத்திமா பஷீர் மெட்ரிக் பள்ளியில் விடுவதற்காக தனக்கு சொந்தமான TN 06 E6181 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் எனது மகளை பின்னால் அமர வைத்துக் கொண்டு காலை 7.50 மணிக்கு நல்லதம்பி ரோடு பம்மலில் மேற்கிலிருந்து கிழக்கில் பல்லாவரம் நோக்கி ஓட்டி சென்று கொண்டிருந்ததாகவும், எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் இடிக்காமல் இருக்க தனது வண்டியை கண்ட்ரோல் செய்த போது தனது இடது பக்கத்தில் வந்த மினி பேருந்து தன் வாகனத்தின் மீது இடித்தது போல் தோன்றியது என்றும், பின்னர் தான் மயக்கம் அடைந்து விட்டேன். தான் கண்விழித்து பார்த்தபோது பின்னால் அமர்ந்திருந்த தனது மகளின் தலை மீது மினி பேருந்தின் பின்சக்கரம் ஏறி இறங்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், அதன் பின்னிட்டு தான் புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 எனவும், மேலும் விபத்து ஏற்படுத்திய மினி பேருந்தின் பதிவு எண் மற்றும் அதன் ஓட்டுநரின் அடையாளம் தெரியுமா என்றால் தான் அதனை பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5.2) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 4 திரு.முகமது ரபீக் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் பம்மல் நல்லதம்பி ரோட்டில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன் எனவும், கடந்த 28.1.2019 அன்று காலை தான் சவாரிக்காக நல்லதம்பி ரோடு வழியாக சென்றதாகவும், மினி பேருந்து விபத்து ஏற்படுத்தியதில் பள்ளி மாணவி ஒருவர் இறந்திருந்தார் என்றும், மேற்படி விபத்து தொடர்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு

வரைபடம் வரைந்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது. மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2. எனவும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.3) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 8 திரு.காலீப் அல்தாப் என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் தனியார் நிறுவனத்தில் பணி செய்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன் என்றும், தனது தங்கையின் மகள் ஆலியா தசீன் என்பவருக்கு பம்மல் அருகே விபத்து ஏற்பட்டதாக தனது மைத்துனர் அ.சா.1 சையது அம்ஜத் எனக்கு தகவல் தெரிவித்தார் என்றும், ஆலியா தசீன் விபத்து நடைபெற்ற இடத்திலேயே இறந்து விட்டதாக தகவல் சொன்னார் எனவும், அதன் பின்னிட்டு தான் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன் எனவும், மேற்படி ஆலியா தசீன் என்பவரின் பிரேத பரிசோதனை நடைபெற்று பிரேதத்தை ஒப்படைத்தார்கள் என்றும், அ.சா.1 மேற்படி ஆலியா தசீன் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் அரசு பேருந்தை முந்தி செல்ல முயன்றதாகவும், எதிரே இருசக்கர வாகனம் வந்ததால் பிரேக் போட்டபோது வாகனம் நிலைதடுமாறி விழுந்ததால் விபத்து நடைபெற்றதாக என்னிடம் சொன்னார் எனவும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள்.

5.4) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 11 திரு.சுரேந்தர் என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது திருத்தணியில் வசித்து வருகிறேன் என்றும், தான் கராத்தே மாஸ்டராக இருந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரி தனது தகப்பனார். 2018ம் ஆண்டில் தாம்பரம் காவல் நிலையத்தில் இருந்து தன்னை தொடர்பு கொண்டு தனது தகப்பனார் ஓட்டுநர் உரிமத்தை எடுத்து வருமாறு சொன்னார்கள் எனவும், தான் அதை தாம்பரம் காவல் நிலையத்தில் கொடுத்தபோது போலிசார் தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை சாட்சியம் அளித்துள்ளார்.

5.5) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 10 திரு.ரகுபதி என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான்

இதற்கு முன்பாக சென்னை மாநகர போக்குவரத்து துறையில் ஓட்டுநராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று விட்டேன் எனவும், கடந்த 28.1.2019 அன்று காலையில் பம்மல் நல்லதம்பி ரோட்டில் நடைபெற்ற வாகன விபத்து வழக்கு தொடர்பாக ஓட்டுநர் ஆறுமுகத்தை விசாரணைக்காக குரோம்பேட்டை போக்குவரத்து புலனாய்வு துறையில் 29.01.2019 மாலையில் ஆஜர் படுத்தி பிணையில் அழைத்து வந்தேன் எனவும், மேலும் விபத்தில் பள்ளிச்சிறுமி ஒருவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன் எனவும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும், மேலும் ஆறுமுகம் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.6) இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 13 திருமதி.மகுடீஸ்வரி (காவல் ஆய்வாளர்) அவர்கள் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது கானாத்தூர் சட்டம் ஒழுங்கு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் எனவும், கடந்த 28.01.2019 ஆம் தேதி காலை குரோம்பேட்டை போக்குவரத்து புலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், பம்மல் நல்லதம்பி ரோடு கதவு எண் 19 என்ற இடத்தில் விபத்து நடந்ததாக தகவல் கிடைக்கப்பெற்று விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்று விசாரணை செய்து விபத்தில் இறந்தவரின் தந்தையான சையத் அம்ஜத் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 51/2019, சட்டப்பிரிவுகள் 279,304(A) இ.த.ச.வின் கீழ் TN 01 AN 1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்து ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் எனவும், அந்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது எனவும், புகார்தாரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், பின்பு விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் சாந்தி, புஷ்பா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு முகம்மது ரபீக் மற்றும் முகம்மது ஷபீர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் எனவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது எனவும், பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது எனவும், மேற்படி சாட்சிகளைவிசாரணை செய்து

வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், பின்னர் விபத்தில் இறந்த ஆலியா தஸீன் என்பவர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் இறந்த நபரின் உறவினர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன் எனவும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது எனவும், பிரேத விசாரணை அறிக்கையில் சாலை விபத்தினால் மரணம் ஏற்பட்டதாக பதிவு செய்தேன் எனவும், மேற்படி இறந்த நபரின் இறப்பிற்குண்டான உண்மை தன்னை அறிய மேற்படி பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்ய சிறப்பு உதவி ஆய்வளார் சிதம்பரநாதன் மூலமாக குரோம்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அந்த கடித்தத்தின் அடிப்படையில் பிணக்கூறாய்வு நடத்தப்பட்டு மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட தலைக்காயம் மற்றும் பல எலும்பு முறிவுகள் அதிக ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியாலும் இறந்துள்ளார் என பிணக்கூறாய்வு சான்று வழங்கியுள்ளார் எனவும், மேலும் பிணக்கூறாய்வு சான்று அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது எனவும், மேற்படி மருத்துவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், சிறப்பு உதவி ஆய்வாளர் சிதம்பரநாதனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், சாட்சிகள் கலீம், வாசு ரகுபதி, சுரேந்தர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரான எதிரி ஆறுமுகம் என்பவரை கடந்த 28.01.2019 அன்று மாலை 5 மணியளவில் சாட்சிகள் ரகுபதி மற்றும் சுரேந்தர் ஆகியோர்களின் முன்னிலையில் ஆஜர் செய்த எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து, தக்க பிணையில் விடுவித்தேன் என்றும், இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 01 AN 1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்தை ஆய்வு செய்ய குன்றத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் வாகனத்தை ஆய்வு செய்து விபத்து வாகன ஆய்வறிக்கை வழங்கிய குன்றத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருநாவுக்கரசு அவர்களிடம் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் எனவும், மேற்படி ஆய்வறிக்கையில் விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்துரு வழங்கியுள்ளார் என்றும்,

மேற்படி TN 01 AN 1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்து விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா–ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது எனவும், விபத்தில் சிக்கிய மற்றொரு வாகனமான TN 06 E 6118 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தை 04.02.2019 ஆம் தேதி ஆய்வு செய்ய குன்றத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் வாகனத்தை ஆய்வு செய்து விபத்து வாகன ஆய்வறிக்கை வழங்கிய குன்றத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருநாவுக்கரசு அவர்களிடம் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி ஆய்வறிக்கையில் விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்துரு வழங்கியுள்ளார் என்றும், மேற்படி TN 06 E 6118 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனம் விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா–ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது எனவும், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக மேற்படி சட்டப்பிரிவிகளின் கீழ் 22.02.2019 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

06) அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியப் பகுதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1) (பி) ன் படி விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு –</u>**

7) அரசுத் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் கடந்த 28.01.2019 ம் தேதி காலை 7.50 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் TN–06–E–6118 ஹோண்டா ஆக்டிவா மோட்டார் சைக்கிளில் அவரது மகள் ஆலியா தாசின் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளை மேற்கிலிருந்து கிழக்காக ஓட்டி சென்றதாகவும், அதே சாலையில் அதே திசையில் சென்ற TN–01–AN–1213 MTC மினி பேருந்தை வலது புறமாக முந்தி சென்றதாகவும், பின்பு

எதிரே வந்த பதிவு எண் தெரியாத மோட்டார் சைக்கிளின் மீது மோதாமலிருக்க பிரேக் போட்டதில் சறுக்கி மோட்டார் சைக்கிளுடன் நிலை தடுமாறி இருவரும் சாலையில் விழுந்துள்ளனர் என்றும், மேலும் மோட்டார் சைக்கிளுக்கு இணையாக TN–01–AN–1213 MTC மினி பேருந்தை எதிரி ஆறுமுகம் என்பவர் அதிவேகமாகவும்,அசட்டையாகவும் ஓட்டி வந்ததில் எம்டிசி பேருந்தின் வலது பக்க சக்கரம் கீழே விழுந்த ஆலியா தாசின் தலையில் ஏறி இறங்கியுள்ளது என்றும், இந்த விபத்தில் ஆலியாதாசின் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார் என்றும் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள அரசு தரப்பு சாட்சிகள் எதிரி மீதுள்ள இதச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சியமளித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறும் எடுத்துரைத்தார்.

8) எதிரி தரப்பில் முன்னிலையான அறிவார்ந்த வழக்கறிஞர் இவ்வழக்கின் எதிரி மீது வழக்கை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியமளிக்காததாலும், எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், முறையாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிமீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், இதர அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீதுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

9) இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் அ.சா.1 சையத் அம்ஜாத் என்பவர் கடந்த 28.01.2019 அன்று புகார் கொடுத்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. அதன் பேரில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)–ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கினை புலன்விசாரணை செய்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

10) அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது இரு சக்கர வாகனத்தில் தனது மகளை பின்னால் உட்பார வைத்துக்கொண்டு பம்மல் நல்லதம்பி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓட்டி சென்று கொண்டிருந்ததாகவும், எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் இடிக்காமல் இருக்க தனது வண்டியை கண்ட்ரோல் செய்த போது தனது இடது பக்கத்தில் வந்த மினி பேருந்து தன் வாகனத்தின் மீது இடித்தது போல் தோன்றியது என்றும், பின்னர் தான் மயக்கம் அடைந்து விட்டேன். தான் கண்விழித்து பார்த்தபோது பின்னால் அமர்ந்திருந்த தனது மகளின் தலை மீது மினி பேருந்தின் பின்சக்கரம் ஏறி இறங்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், அதன் பின்னிட்டு தான் புகார் மனு கொடுத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.2 மும்மது ரபீக் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார் அவர் தனது சாட்சியத்தில் போலீஸ்சார் விபத்து நடைப்பெற்ற இடத்தை பார்வையிடடு மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள் என சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 விபத்து நடைப்பெற்ற இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா2 முகமது ரபீக் மற்றும் முகமது ஷபீர் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைப்படம், பார்வை மகஜர் தயார் செய்ததாக சாட்சிமளித்துள்ளார். மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.6 ஆகியோரது சாட்சியத்தை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி விபத்து நடைப்பெற்ற இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் ஆகியவை தயார் செய்துள்ளார் என அறியமுடிகிறது.

12) இவ்வழக்கில் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்த காவல் ஆய்வாளர் திருமதி.மகுடீஸ்வரி என்பவர் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் சையத் அம்ஜாத் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து, சாட்சி கையொப்பம் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்து, மாதிரி வரைப்படம் தயார் செய்து, பார்வை மகசர் தயார் செய்தும், பிரேத விசாரணை அறிக்கை பதிவு செய்தும், பிணக்கூறாய்வு சான்று உறுதி செய்தும், விபத்துக்குள்ளான வாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தியும், புலன்விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.6–ன் சாட்சியமானது இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி

தனது அரசு பணியை செய்யும்போது சொன்ன சாட்சியமாகவே கருதமுடியும்.

13) இவ்வழக்கில் அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.1 ன் மகள் விபத்தில் இறந்து விட்டதாக தகவல் கிடைக்கப்பெற்றதாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.3 ன் சாட்சியம் கேள்வி நிலை சாட்சியமாகும். அ.சா.4 மற்றும் அ.சா5 ஆகியோர் இவ்வழக்கின் எதிரிக்கு பிணையதாரர்களாக இருந்தது தொடர்பாக சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.4 மற்றும் அ.சா. 5 ன் சாட்சியமானது இவ்வழக்கிற்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14) வழக்காவணங்களான அ.சா.ஆ.1 புகார் மனு, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை, அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை, அ.சா.ஆ.7 பிணக்கூராய்வு சான்று, அ.சா.ஆ 8 விபத்து வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் ஆலியா தாசின் என்பவருக்கு வாகன விபத்து ஏற்பட்டு அவ்விபத்தினால் இறப்பு ஏற்பட்டுள்ளது என அறியமுடிகிறது. மேலும், அ.சா.ஆ 4 ஆவணவமான மாதிரிவரைப்படம், அ.சா.ஆ 5 ஆவணமான பார்வை மகஜர் ஆகியவற்றை புலன் விசாரணை அதிகாரி தயார் செய்துள்ளார் என அறியமுடிகிறது. அ.சா.ஆ.8 ஆவணமான T.N.01–AN–1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்து விபத்து வாகன ஆய்வறிக்கையாகும் மற்றும் அ.சா.ஆ.9 ஆவணமான T.N.06 E 6118 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் விபத்து வாகன ஆய்வறிக்கையாகும். மேற்படி இரண்டு வாகனத்தின் ஆய்வறிக்கையை பரிசீலனை செய்ததில் மேற்படி இரண்டு வாகனங்களிலும் எவ்வித சேதாரங்களும் காணப்படவில்லை. மேலும் மேற்படி வாகனங்களை வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து இவ்வழக்கு விபத்தானது மேற்படி வாகனத்தின் எவ்வித இயந்திர கோளாறாலும் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கியுள்ளார். ஆகவே மேற்படி அறிக்கையின் அடிப்படையில் இவ்வழக்கு விபத்தானது விபத்தில் சிக்கிய வாகனத்தின் எவ்வித இயந்திர கோளாராலும் ஏற்படவில்லை என அறிய முடிகிறது.

15) இவ்வழக்கில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சியில் குறிப்பிட்ட கண்ணுற்ற சாட்சி புஷ்பா என்பவர் காலமாகி விட்டதாலும் மற்றும் கண்ணுற்ற சாட்சி சாந்தி என்பவருக்கு சாட்சி அழைப்பாணை சார்பு செய்ய முடிவில்லை என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்படி சாட்சிகளை அரசு தரப்பில் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. அரசு தரப்பில் வழக்கு விபத்தை

கண்ணுற்ற சாட்சியாக புகார்தாரர் அ.சா.1 யை மட்டும் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

16) அ.சா.1 ம் தனது முதல் விசாரணையில் எதிரி விபத்து ஏற்படுத்திய பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரைதையாகவும் ஓட்டி வந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியமளிக்கவில்லை. மாறாக தனது குறுக்கு விசாரணையில் மினி பேருந்தை வலது புறத்தில் முந்தி செல்லும் போது எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளை இடிக்காமல் இருப்பதற்கு வண்டியை கன்ட்ரோல் செய்த போது வாகனத்துடன் கீழே விழுந்ததில் விபத்து ஏற்பட்டது என்றும் மேலும் புகாரிலும் பேருந்தை வலது பக்கம் முந்தி செல்லும் போது பிரேக் பிடித்ததில் இரு சக்கர வாகனத்துடன் நிலை தடுமாறி கீழே விழுந்த போது பேருந்தின் சக்கரம் தனது மகளின் தலை மீது ஏறி விபத்து ஏற்பட்டதாக புகார் கொடுத்துள்ளார். மேற்படி அ.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கு விபத்தானது எதிரியின் கவனக்குறைவான மற்றும் அஜாக்கிரைதையான செயலால் ஏற்பட்டதென சாட்சியமளிக்கவில்லை. மேலும் இரு சக்கர வாகனத்தில் பேருந்தை முந்தி செல்லும் போது இரு சக்கர வாகனத்தை உடனடியாக நிறுத்துவதற்கு கால்தடை உபயோகிக்கும் போது அந்த இரு சக்கர வாகனம் சரிந்து விழுந்து விபத்து ஏற்படும் போது அந்த விபத்தானது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவான செயலால் தான் ஏற்பட்டது என தீர்மானிக்க முடியாது. இவ்வழக்கு விபத்து ஏற்பட்ட சாலையானது ஒரு வழி சாலையாக உள்ள நிலையில் ஒரு வாகனத்தை மற்றொரு வாகனம் முந்தி செல்ல கூடாது. எனவே மேற்படி சாலை ஒரு வழி சாலையாக உள்ள நிலையில் முன்னால் சென்றுக்கொண்டுயிருந்த பேருந்தை இரு சக்கர வாகனம் முந்தி சென்று வழக்கு விபத்தானது ஏற்பட்டதாக குறிப்பிடும் நிலையில் அவ்விபத்தானது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவான செயலால் தான் ஏற்பட்டது என தீர்மானிக்க முடியாது. ஆகவே மேற்படி அ.சா.1 ன் சாட்சியம் எதிரி மீதான குற்றச் சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ள போதிலும் மேற்படி அ.சா.6 ன் சாட்சியமானது அவர் அரசு பணியை செய்யும்போது சொன்ன சாட்சியமாகவே கருதமுடியும். மேலும் இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய அரசு சிற்றுந்து என்ற வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ஆலியா தாசீன் என்பவர் மீது மோதி இறப்பு ஏற்படுத்தியதாக எவ்வித

கண்ணுற்ற சாட்சிகள் எதிரி மீதான குற்றச்சாட்டை நிருபணம் செய்யும் வகையில் சாட்சியமளிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் மேற்படி அ.சா.6 ன் சாட்சியங்கள் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

18) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் புகார் மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து சம்பவத்தை உறுதியூட்டும் வகையில் தங்களது சாட்சியத்தில் சாட்சியமளிக்காத நிலையில் இவ்வழக்கில் சொல்லப்பட்ட விபத்து சம்பவம் உண்மையிலேயே எதிரியின் அஜாக்கிரதையாலும் மற்றும் கவனக்குறைவினாலும் நடைபெற்றதா என்று சந்தேகம் ஏற்படுகின்றது. எனவே, இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் சாட்சியமளிக்காத நிலையில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.6 ன் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிதான் குற்றவாளி என தீர்மானிக்க முடியாது.

19) மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையிலிருந்து பார்க்கும்போது, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய குற்றக்கூறு உள்ளதாக அமையவில்லை. மேலும் அரசு தரப்பு சாட்சிகளான கண்ணுற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் சாட்சியமளிக்காத நிலையில் அ.சா.6 சாட்சியை மட்டும் வைத்து இவ்வழக்கின் எதிரி தான் இவ்வழக்கு சம்பவத்திற்கு முழுவதும் காரணம் என்றும், எதிரிதான் அதிவேகமாகவும், அஜராக்கிரதையாகவும் வேனை ஓட்டிவந்து இவ்வழக்கின் விபத்தை ஏற்படுத்தி ஆலியா தாசின் என்பவருக்கு இறப்பினை உண்டாக்கினார் என தீர்மானிக்க முடியாது. எனவே, அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய வகையில் இல்லை என இந்நீதிமன்றம் முடிவுகாண்கிறது.

20) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணங்களிலிருந்து எதிரி தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து கோபால் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின்பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்வதே நீதியின்பால் நியாயமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

21) எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் குற்றம்சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

22) இறுதியாக அரசு தரப்பு எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரியின் பிணையப்பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணையபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

23) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள், வியாழக்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/– சி.ப. முல்லை வாணன்.
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

1. <u>அரசுத்தரப்பில் விசாரிக்கபட்ட சாட்சிகள்.</u>

| வ.எண். | சாட்சிகள் | பெயர் |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு.சையத் அம்ஜத் |
| 2 | அ.சா.2 | திரு.முகமது ரபீக் |
| 3 | அ.சா.3 | திரு.காலிப் அல்தா |
| 4 | அ.சா.4 | திரு.சுரேந்தர் |
| 5 | அ.சா.5 | திரு.ரகுபதி |
| 6 | அ.சா.6 | திருமதி.மகுடீஸ்வரி ( காவல் ஆய்வாளர்) |

2. அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்.

| வ.எண் | சான்றாவணங்கள் | தேதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 28.01.2019 | புகார் மனு |
| 2 | அ.சா.ஆ.2 | 28.01.2019 | பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் |
| 3 | அ.சா.ஆ.3 | 28.01.2019 | முதல் தகவல் அறிக்கை |
| 4 | அ.சா.ஆ.4 | 28.01.2019 | மாதிரி வரைப்படம் |
| 5 | அ.சா.ஆ.5 | 28.01.2019 | பார்வை மகஜர் |
| 6 | அ.சா.ஆ.6 | 28.01.2019 | பிரேத விசாரணை அறிக்கை |
| 7 | அ.சா.ஆ.7 | 28.01.2019 | பிணக்கூராய்வு |
| 8 | அ.சா.ஆ.8 | 29.01.2019 | TN 01 An 1213 என்ற வாகனத்தின் விபத்து வாகன ஆய்வறிக்கை |
| 9 | அ.சா.ஆ.9 | 29.01.2019 | TN-06-E-6118 விபத்து வாகன ஆய்வறிக்கை |

3) அரசுதரப்பு சான்றுபொருட்கள் – இல்லை

4) எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் – இல்லை.

5. குறிப்பு.

1. எதிரி விடுதலை செய்யப்பட்டார்.
2. எதிரி விசாரணைக் காலத்தில் பிணையில் இருந்து வருகிறார்.
3. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

Sd/– சி.ப. முல்லை வாணன்.
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

// உண்மை நகல் //

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

C.C.1007/2023
Dated: 14.05.2026
Chrompet TIW PS

Accused present. Heard both sides. Records perused. Judgment pronouned. In result, this court finds that the prosecution has not proved the guilt of the accused for the offences Charges against 279,304(A) beyond all reasonable doubt and the accused is entitled for the benefit of doubt and the accused found not guilty for the offences Charges against accused for the offences Charges against 279, 304(A) and the accused is acquitted from the above charges as per section 248(1) of Cr.P.C and the accused is set at liberty. The bail bond of the accused shall be in force until the expiry of appeal period and the same shall stands cancelled after the expiry of appeal period. No case properties were remanded in the above case.

Detailed Judgment vide separate sheet.

**District Munsif- cum-**
**Judicial Magistrate,**
**Pallavaram.**